[1973 மார்ச் 26

2. கவன ஈர்ப்பு.

உத்தமபாளையம் தாலுகாவில் கோவாபரேடிவ் கிரிடிட் சொஸைடிகளில் விவசாயிகள் வாங்கியுள்ள கடன் வசூலைத் தள்ளிப் போடுவது குறித்து

திரு. ஆர். சக்திமோகன்: தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப்பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். மதுரை மாவட்டம் உத்தமபாளையம் தாலுகாவில் பருவமழை பொய்த்துப் போனதால் விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதால், கோவாபரேடிவ் கிரிடிட் சொஸைடிகளில் விவசாயிகள் வாங்கியுள்ள கடன் தொகைகளின் வசூலை ஆறு மாதங்களுக்குத் தள்ளிப்போட அரசு உத்திரவிட வேண்டுமென்பது குறித்து.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, உத்தமபாளையம் வட்டத்தில் உள்ள கூட்டுறவு நாணயச் சங்கங்களின் எண்ணிக்கை 39. அவற்றில் கடனைத் தள்ளி வைக்க வேண்டுமென்று, அதாவது பயிர்க் கடனை 3 வருட காலக் கடனாக மாற்றுவதற்கான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்ற கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கை 15. கேட்கப்பட்ட தொகை ரூ. 9,09,289. 3 வருட காலக் கடனாக மாற்றப்பட்ட தொகை ரூ. 9,09,289.

மேலும் வறட்சியால் பாதிக்கப்பட்டு, ஆனால் விளைச்சல் ஆறு அணாவுக்குக் குறைவு என்ற அனாவாரி சான்றிதழ் வழங்கப்படாத பகுதிகளிலும் கடன் வசூலிப்பதில் கெடுபிடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படக் கூடாது என அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது. அண்மையில் நேர்ந்த புயல், வெள்ளம், காரணமாக கெடுபிடி நடவடிக்கைகள் 30—6—73 அதாவது கூட்டுறவு வருட முடிவு வரை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

3. 1972–73-ஆம் ஆண்டிற்கான செலவு குறித்து இறுதித் துணை விவர அறிக்கையை வெளியிடுதல்

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, 1972-73-ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை இம் மன்றத்தின்கண் வைக்க முன்வந்துள்ளேன். மானியக் கோரிக்கைகளை விளக்கும் விரிவான அறிக்கை இம் மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளது. மானியக் கோரிக்கைகளின் மொத்தத் தொகை 64.38 கோடி ரூபாயாகும். இதில் 57.29 கோடி ரூபாய் வருவாய்க் கணக்கைச் சேர்ந்ததாகும்; எஞ்சிய தொகை மூலதன, கடன் கணக்குகளைச் சேர்ந்ததாகும். மொத்த மானியக் கோரிக்கையில் 64.05 கோடி ரூபாய் அனுமதித்த இனங்களின் கீழும், 33 இலட்சம் ரூபாய்